# முரசொலி

பக்கங்கள் நான்கு    விலை ரூபா: 5-00

முரசு 66 ஒலி 161 ஆங்கீரச சித்திரை 24 (06 05 1992) புதன்


★ பேரவை உறுப்பினர்கள் பெருச்சாளிகள் என்ற

## ஆறாவது பத்திரிகைக்கு எதிராக சட்டப்பேரவை நடவடிக்கை

பம்பாயில் இருந்து வெளியாகும் "கரண்ட்" என்ற ஆங்கில வார சஞ்சிகைக்கு எதிராகவும் தமிழக சட்டப்பேரவை நடவடிக்கை எடுக்கவுள்ளது. தமிழக சட்டப்பேரவையின் விசேட இரண்டு நாள் கூட்டத்தின் இறுதி நாளான நேற்று இந்த சஞ்சிகை சட்டப்பேரவை உரிமையை மீறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த சஞ்சிகை தனது இறுதிப்பதிப்பில் ஆசிரியர் தலையங்கத்தில் தமிழக சட்டப்பேரவை, ஜெயலலிதா, சேடப்பட்டி முத்தையா ஆகியோரை இழிவுபடுத்தி எழுதியதாகவும் பேரவை உறுப்பினர்கள் பெருச்சாளிகள் எனக் குறிப்பிட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. இக்குற்றச்சாட்டை ஆராய சேடப்பட்டி — 4 ஆம் பக்கம் பார்க்க

# நொச்சிமோட்டையில் ஆறு காவலரண்கள்

# புலிகளின் அதிரடியால் தகர்ந்தது!

## 9 க்கும் மேற்பட்ட படையினர் பலி; 9 ஆயுதங்கள், சிப்பாயின் சடலமும் மீட்பு

வவுனியா, நொச்சிமோட்டை, மாமடுப்பகுதியில் உள்ள இராணுவக்காவலரண்கள் மீது புலிகள் நடத்திய அதிரடியில் 6 காவலரண்கள் முற்றாக தகர்ந்தன 9 க்கும் மேற்பட்ட படையினர் பலியாகினர்,

நேற்று அதிகாலையில் ஆரம்பிக்கப்பட்ட இத்தாக்குதல் ஐந்து நிமிட நேரங்களே நீடித்தன. தாக்குதலில் சிப்பாயின் சடலம் ஒன்றையும் படையினரின் 9 நவீன துப்பாக்கிகளையும் புலிகள் கைப்பற்றினர்.

நொச்சிமோட்டை, மாமடு இராணுவ முகாம்களில் இருந்தே படையினர் வட பகுதி நோக்கி தாக்குதலை நடத்துவதினால் இப்பகுதி இராணுவத்தினருக்கு கேந்திர நிலையமாக இருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

★ இந்தியப்படை விவகாரம்

## இந்தியாவின் ஆட்சேபத்தை ஸ்ரீலங்கா நிராகரித்தது

இலங்கையில் இந்திய இராணுவம் ஆக்கிரமிப்பு இராணுவமாகவே செயற்பட்டது என ஜனாதிபதி பிரேமதாஸ கூறியமைக்காக இந்தியா தெரிவித்த ஆட்சேபத்தை ஸ்ரீலங்கா அரசு நிராகரித்துள்ளது.

பிரேமதாஸ உரையாற்றிய விடயமும் பத்திரிகையில் வெளியான விடயமும் ஒன்றுதானா என விசாரித்தறியாது இந்திய அரசு வெளியிட்ட கண்டனம்குறித்துநாம்கவலைப்படுகிறோம் என ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்தை ஜனாதிபதி பிரேமதாஸ ஆக்கிரமிப்புப் படையாக அண்மையில் வர்ணித்தமைக்கு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஊடாக இந்திய அரசு கடும் ஆட்சேபம் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

★ சவான் கூற்றுக்கு கடும் ஆட்சேபம்

## விடுதலைப் புலிகளை தடைசெய்ய ஜெயலலிதா கோரிக்கை

விடுதலைப்புலிகளை இந்தியாவில் தடைசெய்யுமாறும் இவ்விடயத்தை ஒதுக்கிவிட...

புலிகளை தடைசெய்ய போதிய ஆதாரம் இடைக்கவில்லையெனகடந்த 3-ம் திகதி...

புலிகளை தடைசெய்ய ஆதாரம் நிறைய உண்டு எனக் குறிப்பிட்ட ஜெயலலிதா இவ்விடயத்தில்...

## அமெரிக்க - இந்திய நட்புறவில் முறுகல் நிலை தோற்றம்

அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் நட்புறவு ஏற்படும் சூழ்நிலையில் திடீரென இரு நாடுகளும் ஒன்றையொன்று நேரடியாக பகிரங்கமாக தாக்க ஆரம்பித்துள்ளன.

இந்தியாவிற்கு ரஷ்யா ராக்கெட் தொழில் நுட்பங்களை வழங்கினால் இரு நாடுகளிற்கும் எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடையை கொண்டுவரும் என புஷ் நிர்வாகம் எச்சரித்துள்ளது.

இது இந்தியாவிலும் ரஷ்யாவிலும் பெரும் குழப்ப — 4 ஆம் பக்கம் பார்க்க

## பெருந்தோட்ட நிர்வாகம் 22 தனியார் நிறுவனங்களிடம்

பெருந்தோட்டத் தொழில்களான தேயிலை, றப்பர், தென்னந்தோட்டங்கள் 22 தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இ. ஐ. இ. லங்கம், அய்கின்ஸ் எக்பென்கன், மல்லூப் லிமிடெட், ரிச்சர்ட் பீரிஸ் அன் கொம்பனி லிமிடெட் உட்பட 22 நிறுவனங்களே இனிமேல் தோட்ட நிர்வாகங்களைக் கவனிக்கும் என பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சர் ரூபா கருணாதிலக நேற்றுத் தெரிவித்தார்.

## தமிழருக்கு தனித்துவமான கலை உண்டு எனக் காட்டுவோம்

- ஜெயா

தமிழன் இம்மண்ணில் பாரம் பரியமாக வாழ்பவன் தமிழனுக்கென்று ஒரு வரலாறு இம் மண்ணில் உண்டு. இம்மண்ணின் உரிமையை உடையவன். அவன் தனது இழந்த உரிமையைப் பெற தேசிய தன்மையைப் பெற...

...ஆற்றும்போது விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா எடுத்துக் கூறினார்.

இன்று நாங்கள் வாழும் சூழ்நிலை நெருக்கடியான...

## கைப்பற்றிய ஆயுதங்கள்

நொச்சி மோட்டையில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்:

- ★ 303 எல். எம். ஜி - 1
- ★ அதற்கான மகஸின் - 9
- ★ ஜி3 ஏ3 துப்பாக்கிகள் - 3
- ★ அதற்கான மகஸின் - 24
- ★ ரி - 56 துப்பாக்கிகள் - 3
- ★ அதற்கான மகஸின் - 7
- ★ 40 எம். எம். கைத்துப்பாக்கி - 1
- ★ 303 துப்பாக்கி - 1
- ★ ரி - 81 மகஸின் - 6
- ★ ஐ எம். ரவைகள் - 970
- ★ நோட்டோரவைகள் - 1150
- ★ 303 துப்பாக்கிரவைகள் - 1100
- ★ ஜே. ஆர். குண்டு - 2
- ★ ரி என். ரி குண்டு - 1
- ★ வெளிச்ச குண்டு

## வீரச்சாவு

நேற்று நொச்சிமோட்டை காவலரண்கள் மீதான தாக்குதலில் லெப். ஜெகதீஸ்வரன் (ம. ஜெயசீலன் வவுனியா) வீரச்சாவு எய்தினார்

## மாநகர சபையில் பயிலுநர்கள்

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் போதனை இறுதியில் ஒரு தொகுதி மாணவர்கள் யாழ். மாநகர சபையில் பயிலுனர்களாக கடமையாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இவர்களுக்கு மாநகர ஆணையாளரினால் கருத்தரங்கு ஒன்றும் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

## தெரிவுக்குழு கூடுகிறது

விடுதலைப்புலிகளை இந்தியாவில் தடைசெய்யுமாறும் இவ்விடயத்தை ஒதுக்கிவிட வேண்டாமெனவும் முதலமைச்சர் ஜெயலலிதா இந்திய மத்திய அரசிடம் கோரியுள்ளார்.

புலிகளை தடைசெய்ய போதிய ஆதாரம் கிடைக்கவில்லையெனக் கடந்த 3-ம் திகதி உள்துறை அமைச்சர் சவான் கூறியமைக்கு ஜெயலலிதா கடும் ஆட்சேபத்தை தெரிவித்துள்ளார்.

புலிகளை தடைசெய்ய ஆதாரம் நிறைய உண்டு எனக் குறிப்பிட்ட ஜெயலலிதா இவ்விடயத்தில் ஏன் மத்திய அரசு அசட்டையாக இருக்கிறது எனக்கேள்வி எழுப்பியுள்ளார்.

# ஜனாதிபதியை வார இறுதியில் யாழ்வந்த பிக்குமார் சந்திப்பர்

யாழ்ப்பாணம் வந்த பௌத்த குமார் குழுவினர் இவ்வார இறுதியில் ஜனாதிபதி பிரேமதாஸவை சந்தித்து பேசவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த சமரசத்திட்டங்களையும் அவர்கள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பார்கள்.

யாழ்ப்பாணத்தில் பொது ஸ்தாபனங்கள், பொதுமக்கள் கொடுத்த மகஜர்களையும் பிக்குமார் ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பார்கள்.

ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் மீண்டும் இவர்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் வரும்போது சில பிரமுகர்களும் கூடவரலாம் எனவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. (47)

இம்மண்ணின் உரிமையை உடையவன். அவன் தனது இழந்த உரிமையைப் பெற தேசிய தன்மையைப் பெற சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்து நடத்துகிறான்.

தமிழருக்கு தனித்துவமான பண்பாடும் கலை வடிவமும் உண்டு என்பதை எமது இசைக்கூடாக நாம் உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

இவ்வாறு நல்லூரில் நடைபெறும் இசை விழா நான்காவது நாள் நிகழ்ச்சியில் சிறப்புரை

பொறுப்பாளர் செல்வி ஜெயா எடுத்துக் கூறினார்.

இன்று நாங்கள் வாழும் சூழ்நிலை நெருக்கடியான காலகட்டம் விடுதலையை, சுதந்திரத்தை, தாயகத்தை வேண்டி நிற்கிற மக்களால் இவ்விழா கொண்டாடப்படுகிறது. இசைவிழா கொண்டாடப்படுவதற்கு அர்த்தம் உண்டு. ஓவியம், சிற்பம், நடனம் என்பவை ஒரு நாட்டினது கொள்கையை எடுத்துக் காட்டுவது என்றார். (15)


நல்லூரில் தமிழிசைவிழா

02-05-1992 - 06-05-1992


## தெரிவுக்குழு கூடுகிறது

மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு எதிர்வரும் 19ஆம் திகதி கூடுகிறது.

## லில்லி லில்லி தீவுப்பகுதிக்கு வரும்

லில்லி லில்லி கப்பல் தீவுப் பகுதிகளுக்கான உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு இவ்வார இறுதியில் கொழும்பில் இருந்து புறப்படும் எனச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (47)

# விடுதலைப்புலிகளைத் தடைசெய்ய ஆதாரம் இல்லை- எஸ். பி. சவான்

போதிய ஆதாரங்கள் இல்லாமல் விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய முடியாது என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ள கருத்து அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது என்று தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.

சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இம் மாதம் 21 ஆம் திகதிக்குள்ளாக இவ் இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டும் என்று அவர் பிரதமர் பி.வி.நரசிம்மராவைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# இனக்கலவரத்தால் 20 கோடி டொலர் உடைமைகள் சேதம்

அமெரிக்காவில் இரு நாட்களில் நிகழ்ந்த இனக்கலவரங்களில் 35 பேர் மரணமடைந்ததாகவும் 1200க்கும் கூடுதலானோர் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

நெருக்கடியைத் தீர்க்கும் முயற்சியாக ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தனது மாளிகையில் கறுப்பினத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஆறு நகரங்களில் இனக்கலவரங்கள் நிகழ்ந்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன,

1500க்கும் அதிகமான இடங்களுக்குத் தீ வைக்கப்பட்டது என்றும் உடைமைகளுக்கான சேதம் 20 கோடி டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# சியாராலியோனில் திடீர் புரட்சி அயல்நாட்டுக்கு அதிபர் ஓட்டம்

மேற்கு ஆபிரிக்க நாடான சியாராலியோனில் அதிருப்தியுற்ற துருப்புக்கள் திடீர் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றியதினால் அதிபர் மொமோ பக்கத்து நாடான கினிக்குத் தப்பியோடிவிட்டதாக அறியவருகிறது.

நாட்டை ஆள்வதற்காக 18 உறுப்பினர் இராணுவ சபை ஒன்றைத் திடீர்ப்புரட்சித் தலைவர்கள் அமைத்துள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

லெப்டினன்ட் ஜெனரல் யகியாகானு நாட்டை இப்போது நிர்வகிப்பதாகக் கூறப்படுகிறது.

பலகட்சி ஆட்சியைத் தமது படைவீரர்கள் முற்றிலும் ஆதரிப்பதாக அவர் கூறியுள்ளார்.

காமென்வெல்த் பொதுச் செயலாளர் இப் புரட்சி பற்றிக் கவலை தெரிவித்துள்ளார்.

எந்த இராணுவத்தின் புரட்சியும் ஜனநாயக இடையீட்டைப் பாதிக்கும் என்று லண்டனில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் கூறினார்.

எனினும் இப் புரட்சியாளர்கள் பல கட்சிஆட்சி முறைக்கு உடன்படுவார்கள் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## கி. பல்கலைக்கழகத்துக்கு மூடுவிழா நடக்கலாம்

கிழக்குமாகாணத்தில் தமிழ் முஸ்லிம் பிரச்சினை தொடர்ந்தால் கிழக்கிலுள்ள பல்கலைக்கழகத்தை மூடிவிட வேண்டிய அபாயம் நேரிடுமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர் மன்சூர் மட்டக்களப்பில் வைத்து இவ் வெச்சரிக்கையை நேற்று முன்தினம் விடுத்தார்,

## வருடாந்த பொதுக்கூட்டம்

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் சென்ற கிழமை இடம்பெற்றது

தலைவராக பொ.சிவப்பிரகாசமும், செயலாளராக நந்தகுமாரும், பொருளாளராக குட்டியும் நியமிக்கப்பட்டனர். (47)

## மணிவிழா

குரும்பசிட்டி சன்மார்க்க சபைத் தலைவரும் வடமாநில சித்திர பிரதிக் கல்விப் பணிப்பாளருமான கலாகேசரி ஆ தம்பித்துரை மணிவிழா நேற்றுக்காலை தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் விசேஷ அபிஷேகம் பூசையுடன் ஆரம்பமானது

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இவ்விழா மருதனாமடம் இராமநாதன் கல்லூரியின் கலைப்பேராசிரியர், பொன்னுத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி நல்லூர் கம்பன் கோட்டத்தில் விழா நடைபெறும்,

அன்றுமாலை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள், இசைத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவர்.

## இன்று

யாழ். மணிப்புரி இமெல்டா இறுவர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகள் இன்று பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இவ் விளையாட்டுப் போட்டியை மங்கை விளக்கேற்றி அரியாலை பிரதேச அரசியல் பொறுப்பாளர் செல்வி மிதிலா ஆரம்பித்துவைப்பார்

பிரதம விருந்தினராக பாதிக்கப்பட்ட பெண்கள் புனர்வாழ்வு நிர்வாக பொறுப்பாளர் செல்வி மாலினி சிறப்பு விருந்தினர்களாக வலி- கிழக்கு அரசியல் பொறுப்பாளர் திரு சங்கீதன் கடற்படை மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி நளாயினி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். 47

## மகோற்சவம்

உரும்பராய் பருத்தவர்த்தனி அம்மன் கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

## பொங்கல் விழா

தம்பளை அருள்மிகு தெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த வெளிமடை உற்சவமும் பொங்கல் விழாவும் இம்மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

சன்மார்க்க சபை குரும்பசிட்டி

சன்மார்க்க சபைத் தலைவரும் வடமாநில சித்திரப் பாடப் பிரதிக் கல்விப்பணிப்பாளரும், கலாகேசரி கலை இயக்குநரும் சித்திர சிற்ப கலைஞருமான

கலாகேசரி ஆ. தம்பித்துரையின் மணி விழா

இடம்,- கம்பன் கோட்டம்- நல்லூர்

காலம்:- 09.05.92 சனிக்கிழமை

## தமிழீழ மீட்புநிதி மீளளிப்பு விவரப் பட்டியல்

யா / மா /

யா/மா/ 145, 373, 207, 257, 354 98, 391, 1086, 1808, 1924, 100, 1127, 1645, 337, 1612, 3242, 465, 3169 278, 535, 3076, 401, 705, 485 2391, 3472 349, 268, 2105, 751,

யா / தெ /

யா/தெ/832 46 72, 466' 2092, 632, 930, 990, 2127, 35 991 2695, 508, 922, 940, 2598, 4174,

யா / ச /

யா/ச/ 26, 731, 1395, 2541, 221, 3530, 1524, 1861, 68, 2951, 4211, 282, 4001, 1520, 2133, 4209, 753, 805, 2532, 4159, 810 2095, 1288, 4015, 954, 4250, 136, 2142

யா / வே /

யா/வே/ 54 587, 189, 03, 954, 1128, 04, 53, 222 458,

யா / கா /

யா/கா/ 13,

யா / வ.கி /

யா/வ.கி/ 787, 779, 717, 40.

யா / க /

யா/க/ 417, 922, 959, 326 438, 990, 673 2689, 4012, 4285, 4416 912, 921, 3649 4510, 4904, 139, 208, 4712 663, 813, 4164, 381, 4026, 4727, 301° 914 4310.

யா / பரு /

யா/பரு/ 20, 135, 814, 943, 1536, 1573, 116 1590, 3869, 168, 807, 1223, 2973, 33 316, 650, 768, 867, 4190, 209, 577, 836 3574, 693 1226 210, 1928, 1569, 2048, 4312, 89, 283, 480, 918, 2966, 3782, 4230, 125.

## விளையாட்டுச் செய்திகள்

### வைக்கிங்ஸ் அணி சாம்பியன்

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் வைக்கிங்ஸ அணி 'பி' பிரிவுச் சாம்பியன் ஆனது

சென் அந்தனிஸ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வைக்கிங்ஸ விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து மோதிய ஊரெழு சென்மைக்கல் விளையாட்டுக் கழக அணியைஇப்போட்டியின்பின் 2:0 என்றகோல்கள் கணக்கில் தோற்கடித்தது இப்போட்டிக்கு நடுவர்களாக எம். அருட்பிரகாசம் எம். ஜெபேஸ் அந்தனிப்பிள்ளை, எஸ.றோபேட் ஆகியோர் கடமையாற்றினார்கள் (16)

### உதைபந்தாட்ட போட்டிகள்

மாவீரர்கள் ஞாபகார்த்தமாக குருநகர் சென்றோக் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டித்தொடரில் நேற்று முன்தினம் சென்றோக் விளையாட்டரங்கில் இடம் பெற்ற ஒரு போட்டியில் குருநகர் புதுசாமம் விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய றிம்கோ சிரசர் விளையாட்டுக்கழக அணியை 9:2 என்ற கோல்களால் தோற்கடித்தது

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற இன்னொரு போட்டியில் றோயல் அணி, வைக்கிங்ஸ விளையாட்டுக் கழக அணியை 2:0 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக, எஸ ஜெபேஸ் அந்தனிப்பிள்ளை, எஸ எம், புலேந்திரன், எஸ ஜஸ்ரின் ஆகியோர் கடமையாற்றினார்கள். 16

தமிழும் இசையும் தரணியெலாம்புகழ்பெற
சமமும் தமிழும் கனியெனுமிசையும் சீர்பெற
நிசமும் தமிழினது விழாவினைப் போற்றுவோம்
மகிழும் மனமுடன் மலர்தூவி வாழ்த்துவோம்.

## மணி விழா

இடம்,- கம்பன் கோட்டம்- நல்லூர்
காலம்:- 09.05,92 சனிக்கிழமை
காலை 9 மணி

தலைமை:- கலைப்பேரரசு ஏ,. ரி பொன்னுத்துரை
வாழ்த்துரைகள்:--
மகாராஜஸ்ரீ சு து ஷண்முகநாதக் குருக்கள்
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
பரமேஸ்வரா முன்னாள் அதிபர் எஸ சிவபாதசுந்தரம்
கலாநிதி சி க சிற்றம்பலம். இரா. சுந்தரலிங்கம்
ஆ, மகாலிங்கம் செம்பியன் செல்வன்
மணி விழா சிறப்புரை.
கலாநிதி சோ. கிருஸ்ணராஜா
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
க. விஸ்வநாதன்
பிரசார செயலாளர்
65010

## பொங்கல் விழா

தும்பளை அருள்மிகு நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த வெளிமடை உற்சவமும் பொங்கல் விழாவும் இம்மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

## கிளிநொச்சியில் நாய்கள் ஒழிப்பு

கிளிநொச்சியிலும் அதன் கிராமப் புறங்களிலும் இதுவரை 571 கட்டாக்காலி நாய்கள் ஒழிக்கப்பட்டுள்ளன.

கட்டாக்காலி நாய்களை ஒழிக்க பத்தாயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு போதாதிருப்பதால் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவி கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

வரி. 47 ருச்சமுக அணியை 9:2 என்ற கள். 16

தமிழும் இசையும் தரணியெலாம்புகழ்பெற
சமமும் தமிழும் கனியெனுமிசையும் சீர்பெற
நிகழும் தமிழினது விழாவினைப் போற்றுவோம்
மகிழும் மனதுடன் மலர்தூவி வாழ்த்துவோம்.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்
நடாத்தும்

# தமிழிசை விழா

சிறப்புடன் நடைபெற வாழ்த்துகிறோம்
"தமிழும் இசையும் தரணியெலாம் புகழ் பெறுகவே"
கைத்தொழில் வர்த்தகர் சங்கம்
சாவகச்சேரி
05011

# கொழும்பு துறைமுகம் செல்ல சுதந்திரக்கட்சி எம். பிக்கு தடை

கொழும்பு துறைமுகத்தினுள் செல்ல சுதந்திரக்கட்சி எம்.பியான சி. வி. குணரட்னாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இவர் தன்னை ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என அடையாளம் காண்பித்தும் துறைமுக பாதுகாப்பு அதிகாரிகள் அவரை உள் செல்ல விடவில்லையாம்.

மேலிடத்தின் உத்தரவின்படி இவரை உள்ளே விடமுடியாதிருப்பதாகவும் பாதுகாப்பு ஊழியர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தான் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெங்காயம், மிளகாய், பருப்பு தாராள இறக்குமதி

சிறிலங்கா அரசாங்கம் பருப்பு, செத்தல் மிளகாய், வெங்காயம் ஆகிய பொருட்களின் இறக்குமதிகளைத் தாராளமாக அனுமதிக்கத் தீர்மானித்துள்ளது.

இதுவரை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனமே இவற்றின் இறக்குமதிகளை ஏகபோகமாக கையாண்டு வந்தது. இனிமேல் தனியார்துறையினர் இவற்றின் இறக்குமதிகளைக் கையாள்வர்.

இந்த தாராள இறக்குமதிக் கொள்கையினால் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் பல ஊழியர்கள் வேலையிழப்பது மட்டுமின்றி உள்ளூர் உற்பத்திகளும் பாதிக்கப்படலாம்.

வெங்காயம், மிளகாய், ஆகியவற்றின் அறுவடை காலத்தில் தனியார்துறையினர் இறக்குமதி செய்வார்களாகும் இதனால் விவசாய உற்பத்தியாளர்களின் வருமானம் பாதிக்கப்படலாம்.

# வெளியூர் தபால்கள் கப்பலுக்கு நாளை அனுப்பிவைக்கப்படும்

யாழ். பிரதம தபாலகத்தில் இருந்து நாளை வியாழக்கிழமை பருத்தித்துறைக்கு கப்பலில் அனுப்புவதற்காக தபால்கள் எடுத்துச்செல்லப்படும் என தபால்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் இன்று மாலை 4மணிவரை யாழ் பிரதம தபாலகத்தின் முன்பாகவும் உள்ளேயும் அமைந்துள்ள தபால் பெட்டிகளில் இடப்படும் வெளியூர் கடிதங்களும் கப்பலுக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் அவ்வதிகாரி குறிப்பிட்டுள்ளார். (06)

## ● அமைச்சர் நெடுஞ்செழியன்

# ஈழ அகதிகள் பலவந்தமாக திருப்பியனுப்பப்படவில்லை

தமிழகத்திலிருந்து ஈழத்தமிழ் அகதிகள் எவரும் பலவந்தமாக திருப்பியனுப்பப்படவில்லை என தமிழக நிதியமைச்சர் நெடுஞ்செழியன் நேற்று சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி ராமசந்திரன் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தாய் நாட்டிற்கு திரும்பிச் செல்ல விரும்புபவர்களே அனுப்பிவைக்கப்படுவதாக அமைச்சர் நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

## தமிழக சட்டப்பேரவை விவகாரம்

# சட்டமா அதிபரின் உதவியை உயர் நீதிமன்றம் நாடுகிறது

உயர் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்று பேரவைச் செயலரை அனுப்பாமைக்கு தமிழக சட்டப்பேரவையிடம் இந்திய உயர் நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இதேவேளை மாலை முரசு ஆசிரியர் தாக்கல் செய்தி குறித்த சட்டப்பேரவை பிடியாணையை ரத்துச்செய்வதான வழக்கின் தீர்ப்பை உயர் நீதிமன்று வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைத்துள்ளது.

உயர் நீதிமன்றம் விடுத்துள்ள குறிப்பொன்றில் உரிமைமீறல், உரிமை போன்ற விடயங்கள் பேரவை உறுப்பினருக்கே பொருந்தும் பேரவை செயலருக்கல்ல எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

உயர் நீதிமன்றம் இது தொடர்பாக உறுதியான தீர்மானம் எடுக்க சட்டமா அதிபரின் உதவியை நாடியுள்ளது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 06-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கிளிநொச்சியில் நெல்லின் கொள்வனவு விலை 750 ரூபா

கிளிநொச்சிப் பகுதியில் விவசாயிகளின் நலன் கருதி ஒரு மூடை நெல் 750 ரூபாவாக விற்கப்படும் என அரசாங்க அதிபர் க. பொன்னம்பலம் தலைமையிலான உணவு சம்பந்தமான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அரிசி ஆலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பன வங்கிக் கடன் மூலமாக விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் ஒரு மூடை நெல்லின் கொள்வனவு விலை 525 ரூபாவாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சியில் இருந்து பெருமளவு நெல் யாழ். மாவட்டத்துக்கு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 17

## பல்கலைக்கழக அனுமதி

1990 ஆம் வருடம் க. பொ. த. (உ. த.) பரீட்சை அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதி இரு பரீட்சைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

90 ஆகஸ்டிலும், 91 ஏப்ரலிலும் இவ்விரு பரீட்சைகளும் நடைபெற்றன.

## மோட்டார் சைக்கிளில் தீ

முத்திரைச்சந்தியில் நேற்று முன்தினமிரவு 7 மணியளவில் வீதியால் வந்துகொண்டிருந்த ஓர் மோட்டார் சைக்கிளில் ஏற்பட்ட மின்கசிவினால் மோட்டார் சைக்கிள் தீப்பற்றிக்கொண்டது.

இவ்விடத்தில் நின்ற பொதுமக்கள் தீயை உடன் கட்டுப்படுத்தியதால் மண்ணெண்ணெய் கடைகள் முதலானவை எதுவித சேதமுமின்றி பாதுகாக்கப்பட்டன. (47)

## சம்பள உயர்வு கோரிக்கை

பட்டதாரி ஆசிரியர்களுக்கு 300 ரூபா சம்பள உயர்வு தரவேண்டுமென ஸ்ரீலங்கா பட்டதாரிகள் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு மகஜர் மூலம் கேட்டுள்ளது. 06

---

ஆறாவது...

முதலைமை பேரவை உரிமைக் குழுவிடம் கேட்டுக் கொண்டார்.

தமிழக சட்டப்பேரவையினால் குற்றஞ்சாட்டப்பட்ட 6 ஆவது பத்திரிகை இதுவாகும்.

---

அமெரிக்க...

நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இதே சமயம் அமெரிக்காவின் தடையையும் மீறி நாம் கியூபாவிற்கு அரிசி ஏற்றுமதி செய்யப்போவதாக இந்தியா அறிவித்துள்ளது.

கியூபாவிற்கு நட்புறவு ரீதியில் இந்தியா உதவி புரிகிறது இதை வெளியார் எவரும் தடைசெய்ய முடியாது என இந்தியத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

# ஆப்கானில் ஷெல் தாக்கு

ஆப்கான் தலைநகர் காபூல் நோக்கி குல்புதீன் ஹெக்மதையார் தலைமையிலான கிளர்ச்சிக்குழு நடத்திய ஷெல் தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

இவர்களை எதிர்த்து ஆப்கான் இடைக்கால அரசை ஆதரிக்கும் மசூத் தலைமையிலான கிளர்ச்சிக்குழுவினர் மலைப்பகுதியில் உள்ள ஹெக்மத்தையார் குழுவினர் மீது ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

# மத்திய அமைச்சர் மீது தாக்கு மயிரிழையில் தப்பினார்

இந்திய தகவல் தொடர்பு அமைச்சர் ராஜேஷ்பைலட் சார் மீது நேற்று காஷ்மீர் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய போதிலும் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

அமைச்சரின் மெய்காப்பாளர்கள் திருப்பிச்சுட்டதில் 7 பொதுமக்கள் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாடி இடிந்து வீழ்ந்து பலியானவர்களுக்கு அஞ்சலி செய்துவிட்டு திரும்பும் போதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

# பருத்தித்துறைக்கு கப்பல்கள் அனுப்புவது நிறுத்தப்படலாம்

பருத்தித்துறை துறைமுகத்திற்கு கப்பல் மூலம் உணவுப் பொருள்களை அனுப்புவதை நிறுத்த அரசு ஆலோசித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தற்போது காங்கேசன்துறை ஊடாக குடாநாட்டிற்குள் உணவுப் பொருள்கள் அனுப்பும் வேலைகள் எதுவித தடையுமின்றி நடைபெறுவதும் இதற்கு ஒரு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (47)

# வவுனியாவில் கம்உதாவ?

அடுத்த கம்உதாவ நிகழ்ச்சி வவுனியாவில் நடைபெறக்கூடும் என்றும் இது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் நம்பகமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன

கம்புறுப்பிட்டியாவில் சமீபத்தில் நடைபெற்ற கம்உதாவ நிகழ்ச்சியுடன் 13 ஆவது கம்உதாவக் கொண்டாட்டங்கள் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்றுள்ளன.

ஆயினும் வடமாகாணத்தில் இதுவரை நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மாநாட்டில் பங்குகொள்ளாமைக்கு டிக்ஸிற் கூறும் காரணம்

அண்மையில் கொழும்பில் நடைபெற்றசார்க் வெளியுறவுச் செயலர்களின் மாநாட்டில் கலந்துகொள்ளாமை ஸ்ரீலங்காவுடனான முறுகல் நிலையே என்ற வெளியான செய்திகளை இந்திய வெளியுறவு செயலர் ஜே. என். டிக்ஸிற் மறுத்துள்ளார்.

இந்திய பாராளுமன்ற விவகாரம் ஆப்கானிஸ்தான் விவகாரம் போன்றவற்றை கையாண்டமையே மாநாட்டில் கலந்துகொள்ளாமைக்கு காரணம் என அவர் தெரிவித்தார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான வேளையில் டிக்ஸிற்றே இலங்கையில் இந்திய தூதுவராக பணி புரிந்தவர் என்பது தெரிந்ததே

# வெளிநாடுகளில் இருந்து ஒய்வூதியம் பெறுவோர்

வெளிநாடுகளில் இருந்து ஒய்வூதியம் பெறுவோர் அதற்கான படிவத்தை நேரடியாக வங்கிகளுக்கு அனுப்ப வேண்டும் என யாழ். கச்சேரி வங்கிகளுக்கு அறிவித்துள்ளது

தற்போது இப்படிவத்தை இங்கிருக்கும் உறவினர்கள் வங்கிகளில் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இதில் சில பிரச்சினைகள் எழுந்ததை அடுத்து புதிய விதி நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது

இது ஏப்ரல் மாதம் முதல் அமுல் செய்யப்பட்டிருப்பதாக செயலக வட்டாரம் தெரிவித்தது. (47